


**19. 09. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் சர்வதேச உணவு சந்தையில் இந்தியாவின் தரம் உயரும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. மின்னணு தொழில்நுட்பம் நாட்டின் இன்றியமையா சக்தியாக உருவெடுத்துள்ளது என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. வளர்ச்சி அடைந்த பாரதத்தில் மகளிர் மற்றும் இளையோரின் எழுச்சிமிகு பங்களிப்பின் அவசியத்தை நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழக அரசின் அனைத்து மக்கள் திட்டங்களும் கடைகோடி மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதில் அரசு உறுதியுடன் இருப்பதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. வேலூர் மாவட்டம் பொன்னையாற்றிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

***********

<u>பிரதமர்</u>

சரக்கு சேவை வரி சீர்திருத்தங்கள் சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து, சர்வதேச உணவு சந்தையில் இந்தியாவின் தரத்தை முன்னெடுத்து செல்லும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உணவு பதப்படுத்துதல் துறையில், இலகுவான வர்த்தகத்திற்கு சரக்கு சேவை வரி சீர்திருத்தங்கள் வழிகோலியிருப்பதாக மத்திய அமைச்சர் திரு.சிராக் பாஸ்வானின் கட்டுரையை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், வரி குறைப்பால், மளிகை பொருட்கள் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்கும் என்றார்.

இரண்டாம் கட்ட ஊட்டசத்து இயக்கம் மற்றும் ஒருங்கிணைந்த அங்கன்வாடி இயக்கத்தால் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டசத்து உறுதி செய்யப்படுவதாக பிரதமர் கூறியுள்ளார்.

இதுதொடர்பான மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்பூர்ணா தேவியின் கட்டுரையை பகிர்ந்துள்ள பிரதமர், இந்த ஊட்டசத்து இயக்கம் கோடிக்கணக்கான குழந்தைகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதாக குறிப்பிட்டார்.

***********

.. மியூசிக் ..

சேவை, நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு, அயராது செயலாற்றி வரும் நிலையில், பழங்குடியின சமூகத்திற்கு ஆளுமை வழங்கி வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் அரசின் நடவடிக்கைகள் குறித்த சிறப்பு தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

பழங்குடியின மக்கள் தொகையின் எழுச்சிமிகு தாயகமாக இந்தியா திகழும் நிலையில், நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 10 கோடியே 45 லட்சம் பேர் பழங்குடியினர்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு, பழங்குடியினர் நல திட்டங்களை முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

**...** பிரதமர் வாய்ஸ்**...**

கடந்த 11 ஆண்டுகளில் பழங்குடியினர் நல மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு, 3 மடங்காக அதிகரிக்கப்பட்டு, 13 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கான நிதி சென்ற பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருந்தது.

பிரதமரின் பழங்குடியினர் மேம்பாட்டு திட்டம், இச்சமூக மக்கள் மதிப்புடனும், மரியாதையுடனும் வாழ்வதை உறுதிசெய்வதோடு, இத்திட்டத்திற்காக 24 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினருக்கான மத்திய அரசின் திட்டங்களால் பயனடைவதாக நாமக்கல், திண்டுக்கல் மலைவாழ் பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

----வாய்ஸ்---

5 கோடி பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில், 17 அமைச்சகங்களின் கீழ், 25 நல திட்டங்களை உள்ளடக்கிய பிரதமரின் "பழங்குடியினர் சமூக மேம்பாடு" திட்டம் மூலம் 63 ஆயிரம் கிராமங்களில், கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி வாழ்வாதாரம் வெள்ளிகரமாக முன்னெடுத்து செல்லப்படுகிறது.

.. மியூசிக் ..

***********

அஷ்வினி வைஷ்ணவ்

நம் நாட்டின் மின்னணு தொழில்நுட்பம் மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் கோட்பாடான அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நவீன தொழில்நுட்ப மாற்றங்கள், முன்னெடுத்து செல்வதாக நாளேட்டில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசின் டிஜிட்டல் இலக்குகள், அனைவருக்கும் தொழில்நுட்ப வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதாக கூறிய அவர், விண்வெளி மற்றும் படைப்பாற்றல் துறையில் இந்தியா, உச்சத்தை எட்டி சாதனை படைத்துள்ளதாக எடுத்துரைத்தார்.

இஸ்ரோ 104 செயற்கைகோள்களை ஒரே விண்வெளி திட்டத்தின் கீழ், விண்ணில் செலுத்தி சாதனை படைத்ததாகவும், தற்போது இந்தியாவிலிருந்து ஏவப்படும் ராக்கெட், 34 நாடுகளின் செயற்கைகோள்களை விண்ணிற்கு கொண்டு செல்வதாகவும் குறிப்பிட்டார்.

ககன்யான் விண்வெளி திட்டத்தின் மூலம் உள்நாட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் நான்காவது நாடாக, இந்தியா மேம்படும் என்றார்.

நாட்டின் விஞ்ஞானிகளுக்கு பிரதமர் உறுதுணையாக இருந்து சாதனைகளை படைக்க ஊக்குவிப்பதாக திரு.அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

***********

கிரண் ரிஜிஜூ

வளர்ச்சி அடைந்த தேசமாக நம் நாடு முன்னேற மகளிர் மற்றும் இளையோரின் எழுச்சிமிகு பங்களிப்பின் அவசியத்தை நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மகளிர் சார்ந்த வளர்ச்சியே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

3ஆவது பெரிய பொருளாதார நாடாக மேம்பட இந்தியா பயணித்து வருவதாக கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியில் 11ஆவது இடத்தில் இருந்த இந்தியா 5ஆவது பெரிய நாடாக உருவெடுத்தது குறித்து அவர் பெருமிதம் தெரிவித்தார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் இந்தியா சிறப்பான முன்னேற்றத்தை பதிவு செய்து வருவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

***********

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

வேளாண் உபகரணங்களுக்கான சரக்கு சேவை வரி குறைப்பின் பயன்கள் விவசாயிகளை சென்றடைவதன் அவசியத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் சரக்கு சேவை வரி தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் உரையாற்றிய அவர், டிராக்டர் மற்றும் பல்வேறு இயந்திரங்கள் மீதான வரி குறைப்பால், வேளாண் பொருட்களின் விலை குறையும் என்று சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் பல்வேறு வகையான ட்ராக்டரின் விலை 23 ஆயிரம் ரூபாய் முதல், 63 ஆயிரம் ரூபாய் வரை குறைய வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த விலை குறைப்பால் விவசாயிகளின் வருவாய் கணிசமாக உயரும் என்றார்.

***********

சரக்கு சேவை வரி

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் வரும் திங்கட் கிழமை நடைமுறைக்கு வரும் நிலையில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் மோட்டார் வாகனம் மற்றும் அதன் உதிரிபாகங்களின் வரி பெருமளவு குறைகிறது.

இரண்டு சக்கர வாகனங்கள், சிறிய ரக கார்களுக்கு 28 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகளால் நடுத்தர பிரிவினர் பெரிதும் பயனடைவார்கள் என்று நாகை, வேலூர் மாவட்டங்களை சேர்ந்த பயனாளிகள் தெரிவிக்கையில்.

வாய்ஸ்

***********

முதலமைச்சர்

தமிழக அரசின் அனைத்து மக்கள் திட்டங்களும் கடைகோடி மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதில் அரசு உறுதியுடன் இருப்பதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் மாநில அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு குழு கூட்டத்தில் இன்று பேசிய அவர், மக்களுக்கு தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தரப்படுவதாக கூறினார்.

மாநிலத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், இக்குழுக்களுக்கு இதுவரை 13 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக சென்னை சிறுசேரி, சிப்காட் தொழில்நுட்ப பூங்காவில் 574 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில் முதலீட்டு வர்த்தக தரவு மையத்தை முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

தொடர்ந்து வீரமங்கை வேலுநாச்சியாரின் திருவுருவ சிலையை சென்னை கிண்டியில் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

***********

<u>கோவி செழியன்</u>

தேர்தல் நடைபெறுவதை காரணமாக கொண்டு செமஸ்டர் தேர்வுகள் முன்கூட்டியே நடத்தப்படாது என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் நடத்துவதற்கான விதிமுறைகளை தேர்தல் ஆணையமே பரிசீலிக்கும் என்றார்.

முன்னதாக தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் முதியவர்கள், மாற்று திறனாளிகள் பயன்படுத்தும் நவீன வசதிகளுடன் கூடிய தாழ்தள பேருந்து சேவையை பல்வேறு வழிதடங்களில் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

***********

<u>முத்துசாமி</u>

தமிழ்நாட்டில் மதுக்கடைகள் மூலம் காலி மதுபாட்டில் திரும்ப பெறும் திட்டம், கட்டாயம் செயல்படுத்தப்படும் என்று, மாநில மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காலிபாட்டிலை சேகரிக்கும் வகையில் வைப்புத்தொகையாக பெறப்படும் 10 ரூபாய் திருப்பி வழங்கப்படும் என்றார்.

***********

<u>சிவகங்கை ஆய்வு</u>

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற மதிப்பீட்டு குழுவினர், பல்வேறு வளர்ச்சி திட்டங்களை இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

காரைக்குடியில் கல்லூரி மாணவர் விடுதி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம், சிவகங்கை வார சந்தையின் கட்டுமான பணிகள் போன்றவற்றை இக்குழு பார்வையிட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இன்றுமாலை அனைத்து துறை அலுவலர்களுடன் இக்குழுவினர் பங்கேற்கும் ஆய்வுக்கூட்டமும் நடைபெற உள்ளது.

***********

<u>வெள்ள அபாயம்</u>

வேலூர் மாவட்டம் பொன்னையாற்றில் வெள்ள பெருக்கு காரணமாக, ஆயிரத்து 800 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக காட்பாடி வட்டத்தில் உள்ள பொன்னை, மாதாண்ட குப்பம், எருக்கம்பட்டு, வள்ளிமலை, மேல்பாடி, கீழ்பாதநல்லூர், தேன்பள்ளி, குகையநல்லூர், திருவலம் பகுதிகளை சேர்ந்த கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

***********

## இருவரி

தூத்துக்குடி மாவட்டத்தில் 200 வாக்குச்சாவடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று வெளியிட்டு பேசிய அவர் மாவட்டத்தில் மொத்தம் 14 லட்சத்து 49 ஆயிரத்து 425 வாக்காளர்கள் உள்ளதாக கூறினார்.

நாகை மாவட்டத்தில் நவீன தொழில்நுட்ப கருவிகளை கண்டுபிடிக்கும் விவசாயிகளுக்கு விருது வழங்கப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.

தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் மாமன்னன் இரண்டாம் சரபோஜியின் பிறந்த நாளை ஒட்டி வரும் 24ஆம் தேதிமுதல் தள்ளுபடி விலையில் புத்தகங்கள் விற்பனை செய்யப்படும் என்று ஆட்சித்தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

***********

## கிரிக்கெட்

அபுதாபியில், ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் குரூப் ஏ பிரிவில், இந்தியா இன்று இரவு ஓமனை எதிர்கொள்கிறது.

சூப்பர் 4 சுற்றுகள் நாளை தொடங்குகின்றன.

இறுதி போட்டி வரும் 28ஆம் தேதி நடைபெறும்.

***********